**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தொடக்க காலத்தில் சிறுகதைகளை வெளியிட்ட இரு இதழ்களின் பெயரினைச் சுட்டுக,
2. சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் வழக்கத்தை முதன்முதலில் கொண்டுவந்த பத்திரிக்கை எது?
3. புதுமைபித்தனின் சிறுகதைகளில் அதிகம் விமர்சனம் செய்யப்பட்ட கதைகள் இரண்டினை எழுதுக.
4. முதன்முதலில் உலகத்தமிழ் மாநாடு எங்கு நடைபெற்றது?
5. விந்தனின் இயற்பெயர் யாது?
6. ஜெயகாந்தனின் முதல் சிறுகதை எப்போது எவ்விதழில் வெளிவந்தது?
7. அண்ணாவின் இரு வரலாற்று சிறுகதைகளை எழுதுக.
8. புதிய மொட்டுக்கள் புதினத்தில் இடம்பெறும் சுதந்தர ராஜனின் இயற்பெயர் என்ன?
9. பொன்னீலனின் புதினங்கள் எத்தகையன?

10. ராஜம்கிருஷ்ணன் எழுதிய இரு சமூகப் புதினங்களை எழுதுக.
11. சிவகாமியின் முதல் நாவல் எது?
12. கீ.ரா. புதினத்தில் முதல்முதலில் இரயிலைப் பார்த்த மக்கள் என்ன செய்தார்கள்?
13. கே. டேனியல் எழுதிய மூன்று புதினங்கள் யாவை?
14. தமிழ்நாட்டில் ஜேம்ஸ் ஹட்லி சேஸ் யார்?
15. சமூகப் புதின ஆசிரியர் இருவரைக் குறிப்பிடுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தி. ஜானகிராமனின் யோஷிகி கதையின் சிறப்பை எழுதுக.
2. பிரபஞ்சனின் நேற்று மனிதர்கள் கதைத் தன்மையை விவரிக்க.
3. அக்னிப்பிரவேசம் சிறுகதையின் சிறப்பினை எழுதுக.
4. கண்டாமணி சிறுகதையின் சிறப்புகளை எழுதுக.
5. வரலாற்று புதினத்தின் புதின ஆசிரியர்களின் பெயர்களை எழுதுக.
6. பின்னோக்கு உத்தி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
7. கல்கியின் தியாக பூமி புதினத்தின் கதைமாந்தர்களின் பெயர்களைச் சுட்டுக.
8. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய புதினங்களைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியத்தில் சிறுகதை வளர்ச்சியை விவரிக்க.

2. (அ) புதுமைப்பித்தன் சிறுகதைகளை விமர்சனம் செய்க.

(அல்லது)

(ஆ) ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களின் நிலைப்பாட்டை அம்பையின் சிறுகதை வழி விளக்குக.

3. (அ) கே. டேனியலின் பஞ்சமர் புதினத்தின் சாதிப் பிரச்சனைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) அகிலனின் பொன்மலர் புதினத்தின் கதைமாந்தர் பண்புகளை ஆராய்க.

***